**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 124/2024.**
**அ.சா. 3 – திருமதி. மாதவிகா.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.06.2026.

* * * * * * *

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அ.சா.3 மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

(1) சம்பவ இடத்திற்கு போலீசார் எத்தனை மணிக்கு வந்தனர் என்றால், 10.00 மணியிருக்கும். வழக்குச் சம்பவத்திற்கு முன்பாக உள்ள குற்ற வழக்கில் என் கணவர், எதிரியாக உள்ளார் என்றால், சரிதான். என் கணவர் ராணுவத்தில் பணிபுரிகிறார். காவல் துறையினர் யாரெல்லாம் விசாரித்தார்கள் என்றால், எங்கள் வீட்டில் உள்ளவர்களை விசாரித்தார்கள். வேறு யாரையும் விசாரித்தார்களா? என்று நான் பார்க்கவில்லை. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு, 04.02.2024 ஆம் தேதியன்று அதிகாலை சுமார் 05.00 மணியளவில் வெளியில் சத்தம் கேட்டு வெளிச்சமாக இருந்தது என்றும், நான் என் அப்பா, என் அக்கா, என் அக்காவின் கணவர் வசந்த் ஆகியோர்கள் கதவைத் திறந்து வெளியே வந்து பார்த்தபோது, ஜெகதீஸ்பாண்டியன் என்பவர் கையில் வைத்திருந்த கேனிலிருந்த பெட்ரோலை, மேற்படி யமகா இருசக்கர வாகனத்தில் ஊற்றி தீ வைத்தார். எங்களைப் பார்த்ததும், எங்கள் வீட்டின் முன்பிருந்த பாதை வழியாக ஓடிவிட்டார் என நான் போலீசார் விசாரரைணயில் தெரிவித்துள்ளேன். அந்தப் பாதையானது A.D. பள்ளிக்குச் செல்லும் பாதையா? என்றால், இல்லை. அது ஹை ஸ்கூலுக்குச் பின்புறம் செல்லும் பாதையாகும். A.D. பள்ளிக்குச் செல்லும் பாதை அந்தயிடத்தில் இல்லை என்றால், சரிதான்.

(2) சம்பவத்தின்போது, பொதுமக்கள் எத்தனை பேர்கள் இருந்தார்கள் என்றால், ஊர்க்காரர்கள் யாருமில்லை. காலை 05.00 மணியிலிருந்து போலீசார் வந்த 10.00 மணிவரை நான் சம்பவயிடத்தில் நான் இருந்தேன் என்றால், சரிதான்.

போலீசார் வரும்வரை ஊர்க்காரர்கள் வந்தார்களா? என்றால், நான் அதைக் கவனிக்கவில்லை. எங்கள் வீட்டைச் சுற்றி ஏனைய வீடுகள் உள்ளன என்றாலும், அதில் ஆட்கள் இருக்கின்றனர் என்றால், சரிதான். அவர் ஊற்றி எரித்த பொருள் பெட்ரோலா? டீசலா? மண்ணெண்ணையா என்றால், பெட்ரோலாக்கத்தான் இருக்கும். அவர் தூக்கி எறிந்த பாட்டில் அங்கு கிடந்தது. அதில் பெட்ரோல் இருந்தது. பாட்டில் சிதறியிருந்ததா? என்றால், அது பிளாஸ்டிக் பாட்டில் ஆகும். போலீசாரிடம் அடையாளம் காண்பித்து போலீசார்கள் எடுத்துச் சென்றார்களா? என்றால், நான் அடையாளம் காட்டவில்லை. அந்த பாட்டில் தீயில் எரிந்துவிட்டது. நான் சொன்னதுபோல் நான் எந்த சம்பவத்தையும் நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. என் வீட்டின் முன்பாக அப்படியொரு வாகனம் நிறுத்தப்படவில்லை என்றாலும், சரியல்ல.

(3) என் கணவர், எதிரியின் சகோதரரை கத்தியால் குத்தி, மருத்துவமனையில் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்றுவருபவரை தெரிந்துகொண்டு, அந்த வழக்கிலிருந்து என் கணவரும், எங்கள் குடும்பத்தினரும் தப்பிப்பதற்காக என் அப்பாவின் ஆலோசனையின்பேரிலும், காவல் ஆய்வாளரின் ஆலோசனையின்பேரிலும் ஒரு பொய்யான புகார் கொடுக்கப்பட்டு, அந்தப் பொய்ப் புகாருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எதிரி எந்தவித குற்றச் செயலிலும் ஈடுபடவில்லை என்றால், சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.06.09 18:51:16 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தேனி.**